**<u>மாவட்ட உரிமையியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி</u>**

**அசல் வழக்கு எண். 255 /2019 பி.வா.சா.1**

2026–ம் ஆண்டு ஜனவரி திங்கள் 27–ம் நாள் செவ்வாய்கிழமை–ன் வாக்குமூலம் 1857 ம் ஆண்டு சட்டப்பிரிவு 10(1)(அ)ன் படி ஆணை உறுதி செய்துவைக்கப்பட்டது.

| | |
|---|---|
| பெயர்: ராஜாராம் | தந்தை பெயர்: ராமையா |
| ஊர்: | தாலுகா: |
| வயது: | தொழில்: |
| ஜாதி: | சமயம்: |

---

<u>27.01.2026:</u>

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

1. எனது தாத்தா பெயர் கரந்தப்பன் ஆவார். கரந்தப்பன் மனைவி பெயர் உலகம்மாள் ஆகும். கரந்தப்பன் மகன்கள், காவேரி என்ற பெரியண்ணன், இராமையா ஆகும். ராமையா எனது அப்பா ஆவார். 2ம் பிரதிவாதி எனது அண்ணன் ஆவார். 3முதல் 6 பிரதிவாதிகள் எனது சகோதரிகள் ஆவார்கள். 7ம் பிரதிவாதி காவேரி என்ற பெரியண்ணனின் மனைவி ஆவார். 8 முதல் 11 வரையிலான பிரதிவாதிகள் வாதியின் சகோதரிகள் ஆவார்கள்.

2. தாவாச் சொத்துக்கள் காவேரி என்ற பெரியண்ணன், இராமையா ஆகியோரின் பூர்வீக சொத்துக்கள் ஆகும். எனது பெரியப்பா, அப்பா ஆகியோர் இருவரும் சேர்ந்து கிரையம் பெற்ற சொத்துக்களையும் பிரித்துக்கொண்டார்கள். இருவரும் தனித்தனியாக கிரையம் பெற்ற சொத்துக்களை தனித்தனியாக அனுபவித்து வருகிறார். பூர்வீகச் சொத்துக்களை இருவரும் தனித்தனியாக அனுபவிப்பதற்கு தற்காலிக குடும்ப ஏற்பாடு செய்து கொண்டார்கள் என்றால் இல்லை. முற்றிலுமாக பாகப்பிரித்துக் கொண்டார்கள்.

3. 01.11.2023ம் தேதியன்று பி.வா.சா.ஆ–4 யின் மூலம் இவ்வழக்கு தாக்கலுக்கு பின்பு நானும், எனது சகோதர சகோதரிகளும் பாகம் ஏற்படுத்திக் கொண்டோம் என்றால் சரிதான். தாவா 3,5, 6 சொத்துக்களுக்காக மேற்படி பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் பிரிவில்லாத மொத்த பாகம் 2ல் பிரிவினையில்லாத பெரியண்ணன் பாகம் 1 யை நீக்கி பிரிவில்லாத இராமையா பாகத்தில் 5 பங்காக பாகம் பிரித்து கொண்டதாக ஷரத்து காண்பிக்கப்பட்டது என்றால் சரிதான். தற்காலிக குடும்ப ஏற்பாட்டின்படி தாவா 1ம் இலக்க சொத்தில் மேற்கே வாதியின் தந்தையும், கிழக்கே எனது தந்தையும், பொதுவான கிணற்றின் மூலம் நீர் பாசனம் செய்து அனுபவித்து வந்தோம் என்றால் இல்லை. மேற்கே 60 செண்டு எனது பெரியப்பாவும், கிழக்கே 60 செண்டு எனது அப்பாவும் அனுபவித்தார்கள்.

4. முழுச் சொத்தும் 1ஏக்கர் 10 செண்டு என்றும், மேற்கே 50 செண்டு என்று சாட்சி கூறிகிறார். கிழக்கே 60 செண்டு எனது அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா 2ம் இலக்க சொத்தில் மேற்கே, 3½ செண்டு எனது பெரியப்பாவிற்கும், கிழக்கே 3½ செண்டும் அனுபவிப்பதற்காக தற்காலிக ஒதுக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

5. தாவா 3ம் இலக்க சொத்து 2 ஏக்கர், 80 செண்டாகும். தாவா 3ம் இலக்க சொத்தில் கிழக்கே, 1ஏக்கர் 40 செண்டு எனது பெரியப்பாவிற்கும், மேற்கே 1ஏக்கர் 40 செண்டும் அனுபவிப்பதற்காக தற்காலிக ஒதுக்கப்பட்டது என்றாலும் சரிதான். ஆனால் தற்காலிகமாக ஒதுக்கப்படவில்லை. முழுவதுமாக பிரித்துக்கொண்டார்.

நான் தாக்கல் செய்துள்ளஎதிர்வழக்குரையில் 3ம் இலக்கசொத்துக்களை எனது பெரியப்பாவும், எனது அப்பாவும் சரிபாதியாக பிரித்துக் கொண்டு அனுபவித்து வந்தார்கள் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் பி.வா.சா.ஆ–4ல் பிரிவினையில்லாத 2 பாகத்தில் 1பாகம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

6. தாவா 4ம் இலக்க சொத்திலுள்ள வீட்டில் எனது பெரியப்பா கிழக்குப்புறம் குடும்பத்துடன் வசித்து வந்தார் என்றாலும், மேற்கே எனது அப்பா குடும்பத்துடன் வசித்து வந்தார் என்றால் சரியல்ல எனது அப்பாதான் முழுவதுமாக அனுபவித்து வந்தார். நான் வழக்கிற்காக எனது அப்பா முழுச் சொத்தையும் அனுபவித்தாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7.வாதி தொழில் காரணமாக தாவாச் சொத்துக்களிலிருந்து 2 பரலான்ங் துாரமான தும்பைப்பட்டியில் வீடு கட்டி ட கடை வைத்து நடத்தி வந்தார் என்றால் சரிதான். எனது பெரியப்பா 1997 வருடம் இறந்து விட்டார். அதற்கு முன்பாகவே எனது அப்பா இறந்து விட்டார் என்றால் சரிதான். வாதி வேலை நிமித்தம் வெளிநாட்டிலிருந்தார் என்றால் சரிதான்.

8. தாவா 3,5, 6 இலக்க சொத்துக்களுக்கு எனது அப்பா, பெரியப்பா பெயரில் இன்றுவரை வா.சா.ஆ –1கூட்டுபட்டா உள்ளது என்றால் சரிதான். தாவா 7 ம் இலக்கச் சொத்தானது உட்பிரிவுகளுக்கு முன்பு எனது பெரியப்பா பெயரில் வா.சா.ஆ–8 SLR பட்டா உள்ளது என்றால் சரிதான். தாவா 7ம் இலக்கச் சொத்திற்கு மோசடியாக எனது அப்பா பெயரில் பட்டா மாற்றியுள்ளோம் என்றால் சரியல்ல.

9. எனது பெரியப்பா, அவரது மனைவி மற்றும் அவரது வாரிசுகளான 8 முதல் 11 பிரதிவாதிகளுக்கு அவர் கியைம் பெற்ற சொத்துக்களை பாத்தியப்படுத்தி விட்டாரா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி வெளிநாட்டிலிருக்கும் போது அதே பயன்படுத்தி நானும், எனது அண்ணன் 8 முதல் 11 பிரதிவாதிகள் ஆகியோர் துணையுடன் வழக்கு போட்டுள்ளோம் என்றால் சரியல்ல வீட்டிற்காக வழக்கு போட்டோம். அதன் அ.வ. எண்–26/98 என்றால் சரிதான். அந்த வழக்கில் வாதி தரப்பினர் இல்லை என்றால் சரிதான். அ.வ. எண்–26/98 வழக்கின் தீர்ப்புரை , தீர்ப்பாணை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

10. 1970ல் எனது அப்பாவும், பெரியப்பாவும் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று எதிர்வழக்குரையில் கூறியுள்ள எனது வழக்கிற்கு மேற்படி அ.வ.எண். 26/98 வழக்கின் தீர்ப்புரை, தீர்ப்பாணை பாதகமாக உள்ளதால் அதனை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர் வழக்குரையில் எந்த தேதியில், யார் முன்னிலையில் எனது அப்பாவிற்கும், பெரியப்பாவிற்கும் பாகம் ஏற்பட்டது என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி பாகம் எழுதப்பட்டதா, பதிவு செய்யப்பட்டதா என்பது குறித்து எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளது போல் வாதிக்கும், எங்களுக்கும் சட்டப்படி பாகம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

11. எனது நிருபணவாக்குமூலத்தில் 58 வருடத்திற்கு முன்பாக பாகம் நடந்தது என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 10 வருடங்கள் ஆனாதால் அப்படி சொல்லியுள்ளேன். சட்டப்படி பாகம் நடக்காததால் முன்னுக்கு பிரணாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது பிரமாணவாக்குமூலத்தில் பத்தி 6 முதல் 9 வரையிலான சங்கதிகளை எனது எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதுகுறித்து கூடுதல் எதிர் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

12. பி.வா.சா.ஆ –7ல் தாவா 3இலக்கச் சொத்தின் சர்வே எண். 128/8 பி இராமையாவிற்கு பூர்வீக பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது நிருபணவாக்குமூலத்தில் சர்வே எண். 128/8பி இராமையாவிற்கு தனிப்பட்ட பாத்தியம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தாவா4ம் இலக்க சொத்திற்கான பி.வா.சா.ஆ–5 தோராய பட்டா என்றால் சரிதான்.

தோராய பட்டா என்பதுமுழு உரிமைகள் அடங்கிய பட்டா இல்லை என்றாலும் துாய பட்டா முழு உரிமைக்காக வழங்கப்படும் என்றால் சரிதான்.

13. தாவா 1ம் இலக்கச் சொத்திற்கு பி.வா.சா. ஆ–2 ல் காவேரி என்ற பெரியண்ணன் என்பதற்க பதிலாக காவேரியம்மாள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில், வீட்டிற்குண்டான வரி இரசீதுகள், மின் கட்டணம் செலுத்துவதாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வரி இரசீதுகள் அனைத்தும் தாவா 4ம் இலக்க சொத்திற்குரியது அல்ல என்றால் சரியல்ல.

14. அ.வ. எண்.–26/98 வழக்கில் என்னென்ன சொத்துக்கள் அடங்கியுள்ளது என்று தீர்ப்பாணை பார்த்தால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ–4, 7 மூலம் தாவாச் சொத்துக்களுக்கு சட்டப்படியான பாகம் நடைபெறவில்லை என்று தெரியவருகிறது என்றால் சரியல்ல. உண்மையில் பாகம் ஏற்பட்டிருந்தால் கூட்டுப்பட்டாவிலிருந்து தனிப்பட்டா ஏற்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. பிராதில் தற்காலிக அனுபவித்திற்காக தற்காலிக குடும்ப ஏற்பாடு ஏற்பட்டுள்ளதாக சொல்லப்பட்டதுள்ளதே தவிர சட்டப்படியான பாகம் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.